சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.104/2023</u>

29.10.2025

வா.சா.1 திரு.கௌதமன், த/பெ. துரைசாமி

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் வாதி வங்கியில் 29.05.2022 லிருந்து கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். பிரதிவாதிகள் பெற்ற கல்வி கடனுக்காக மத்திய அரசிடமிருந்து சப்ஸ்டிஸிஸ் ஏதாவது வங்கியிலிருந்து பெறப்பட்டதா என்றால் இல்லை. எம்சிஎல்ஆர் ஆனது 01.10.2019 க்கு முன்பே இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி வருடத்திற்கு 11.55 சதவீதம் அல்லது 11.60 சதவீதம் மட்டுமே வட்டி வசூலிக்கவேண்டும் என்றால் சரியல்ல. 29.09.2015 முதல் 30.09.2023 வரை 11.90 சதவீதம் வட்டி கணக்கிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதத்திற்கு ஏற்ப மாறுபட்டிருக்கும். வா.சா.ஆ.13 ஆவணத்தின் படி வட்டி விகிதம் கணக்கிடாமல் கூடுதல் வட்டி கணக்கீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 14.10 சதவீதம் வட்டி பெறுவதற்கு உரிமையுள்ளது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கடன் கொடுக்க ஒப்பந்த கடிதத்திலேயே வட்டி விகிதம் எப்படி கணக்கிடப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. கல்வி கடனை பகுதி பகுதியாக கடன்தாரர்களுக்கு வழங்குவோம் என்றால் சரிதான். அதன்படி பிரதிவாதிகளுக்கு கடைசியாக கடன் தொகை வழங்கியது 14.06.2018 என்றால் சரிதான். 14.06.2018 அன்று பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவை தொகை ரூ.3,68,311/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடைசியில் கடன் தொகை வழங்குவதற்கு முன்பே வட்டி தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வட்டியை அசலுடன் சேர்த்து அதற்கும் வட்டி வசூலிக்கலாம் என ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 30.04.2020 லிருந்து 30.05.2020 வரை கொரோனா வைரஸ் பரவியதன் காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் வட்டி வசூலிக்ககூடாது என இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவு பிறப்பித்திருந்தது என்றால் சரியல்ல. ஆனால் அந்த காலக்கட்டத்திற்கு அபாரத வட்டி கணக்கிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் 29.09.2020 க்கு பின்னிட்டுதான் தவணை தொகையை செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்றாலும் ஆனால் அதற்கு முன்பே வட்டி கணக்கிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தில் பிரதிவாதிகள் ரூ.15,282.75/- செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.13,000/- மட்டும்

செலுத்தியுள்ளார்கள். பிரதிவாதிகள் செலுத்திய தொகையை பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த தொகையை கழித்துக்கொண்டுதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கு 24.05.2024 அன்று அவர்கள் பெற்ற கடன் வரா கடன் என அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அறிவிப்பில் கடனை செலுத்த முன் வருபவர்களுக்கு கணிசமாக வட்டி தொகை சலுகை செய்யப்படும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் வங்கிக்கு வந்தபோது அசலை மட்டுமே செலுத்தினால் போதும் என தெரிவித்தோம் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் அசல் தொகையை பிரதிவாதிகள் வாதி வங்கியில் செலுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல. 14.10 சதவிதம் வட்டி கணக்கிடப்பட்டு வழக்கு தாக்கல் செய்தது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதவாதி நான் சொல்வது போல் பெங்களூரில் வேலைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தற்போது 2 ஆம் பிரதிவாதியின் பராமரிப்பில் தான் 1 ஆம் பிரதிவாதி இருந்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையிலுள்ள போது பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தயாராக இல்லை என்றால் பாக்கிதொகையை பிரதிவாதிகள் கட்ட வேண்டும். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி முதல்வரை விசாரிக்கவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் காலாவதியானவை என்றால் சரியல்ல. வழக்குரையில் முறையாக கணக்கிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 11.90 சதவித வட்டி மட்டுமே நாங்கள் பெற தகுதியுடையது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.